**இராமநாதபுரம்நகர்மன்றத்தின்சாதாரணகூட்டம்நாள் : 30.08.2023 புதன்கிழமைகாலை10.30மணி**

<table>
<tr><th>வ.எண்</th><th>நகர்மன்றப்பொருள்</th><th>நகர்மன்றதீர்மானஎண்மற்றும்தீர்மானவிபரம்</th></tr>
<tr><td>1</td><td>பொருள் 1<br>இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஜீலை 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்–650<br>தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>2</td><td>பொருள் 2<br>இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஜீலை 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்–651<br>தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>3</td><td>பொருள் 3<br>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில், இந்திரா நகரில் இருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைத்திற்கு செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் காட்டூரணி (பழைய நகராட்சி பம்ப் அறை எதிர்புறம்) திடீரென உடைந்து விட்டது. இதனால் நகரின் அனைத்து இடங்களிலும் கழிவுநீர் பம்பிங் செய்ய இயலவில்லை. இதனை உடனடியாக பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டும். பழுதாகியுள்ள 450mm Psc குழாயினை MS Bore well பைப்பாக மாற்றம் செய்யும் பணிக்கு ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்:12.06.2023–ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதள வாயிலாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.P.சுப்பிரமணி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.01%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>33.45%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.P.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.01% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2298/2023/இ1</td><td>தீர்மான எண்–652<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>4</td>
<td>பொருள் 4<br>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் பராமரிப்பில் சிங்காரத்தோப்பு கழிவுநீர் அகற்றும் நிலையத்தில் இருந்து, குண்டூரணி (காட்டுப்பிள்ளையார் கோவில்) வரை செல்லும் பிரதான கழிவுநீர் குழாய் தினகர் ராஜா பள்ளி அருகில் உடைந்து விட்டது. ஏற்கனவே உடைப்பு ஏற்பட்ட குழாயின் உட்பக்கம், அடுத்து பழுதடைந்த இரண்டு குழாய்கள் உடைந்து கழிவுநீர் வெளியேறுகின்றது. அதனை உடனடியாக MS Steel Borewell பைப்பாக பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால் Zone-I மற்றும் Zone-II-ல் உள்ள கழிவுநீர் முழுவதும் வெளியேற்றம் செய்யாமல் உள்ளது. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே அவசர அவசியம் முன்னிட்டு இப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ. 5.25 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.12.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.06.2023-ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதள வாயிலாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.P.சுப்பிரமணி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.02%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>2.67%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
விலை விகிதம் வழங்கியுள்ள திரு.P.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.02% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2299/2023/இ1</td>
<td>தீர்மான எண்-653<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>பொருள் 5<br>இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரம் மத்திய சுற்றுச் சூழல் காடுகள் மற்றும் பாதுகாப்பு சட்டம் 1986(29.08.1986) பிரிவு 3.6 மற்றும் 25-ன் படியும் தமிழ் நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-ன் பிரிவு 153,156,157,158,160,161 மற்றும் 306-ன் கீழ் துணைவிதிகள் ஏற்படுத்தியும் திடக்கழிவு மேலாண்மை திட்ட சேவை வரியாக நிர்ணயம் செய்து அதனை மாவட்ட அரசிதழ் வெளியீடாக 01.07.2017 அன்று வெளியீடு செய்து அதனை சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் சொத்துவரி உடன் இணைக்கப்பட்டு தற்போது வசூல் செய்யப்பட்டுவருகிறது.<br>மேற்படி அரசிதழ் வெளியீட்டில் சில தொழில்களை தவிர அநேக தொழில்கள் விடுபட்டுள்ளது. மேலும் உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண</td>
<td>தீர்மான எண்-654<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

மண்டபங்கள், மருத்துவமனைகள் போன்ற தொழில்களுக்கு அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் வகைப்பாடுகள் பிரிக்கப்படாமல் திடக்கழிவு பயனாளற் கட்டணம் (SUC) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சியின் அனைத்து வரி இனங்களையும் வசூல் செய்ய இயலாது நமது நகராட்சி ஆண்டு வரி வசூலிப்பில் பின் தங்கியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இந்நிலை தொடருமானால் நகராட்சி நிரந்தரமாக வரி வசூலில் பாதிப்பு உண்டாகி அதன் மூலம் நகராட்சியின் பல செயல்பாடுகளில் சுணக்கம் ஏற்படும் சூழல் உருவாகிவிடும். இச்சூழல் உருவாகும் நிலையில் இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படும் சூழல் உள்ளது. எனவே இதனை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ல் இதற்கென உள்ள பிரிவு எண்.15–ல் விதி எண்.(F) அவ்வப்போது முறையான பயன்பாட்டு கட்டணத்தை தீர்மானித்து அந்த கட்டணத்தை அவர்களாகவே அல்லது அங்கீகரிக்கப்ட்ட முகவரமைப்பு வாயிலாக கழிவு உருவாக்குபவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வழி வகையில் உள்ளதை கருத்திற்கொண்டு மேற்கண்ட சேவை கட்டணங்களை விரிவாக பின்வருமாறு வகைப்படுத்தி கட்டணத்தை மறுநிர்ணயம் செய்து மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | TRADE NAME | USER CHARGES Rs. (Per Month) |
|---|---|---|
| 1 | விவசாய பண்ணை சர்விஸ் | 200 |
| 2 | ஏசி விற்பனை | 200 |
| 3 | ஏசி சர்விஸ் | 100 |
| 4 | அலுமினியம் கதவு, ஜன்னல் | 200 |
| 5 | அலுமினியம் கதவு, ஜன்னல் | 200 |
| 6 | ஆட்டோ மொபைல் டீசல் ஒர்க்ஸ் | 100 |
| 7 | ஆட்டோ மொபைல் டீசல் ஒர்க்ஸ் | 100 |
| 8 | ஆட்டோ மொபைல் பெயிண்டிங் ஒர்க்ஸ் | 100 |
| 9 | ஆட்டோ மொபைல் ஆயில் ஸ்டோர் | 100 |
| 10 | ஆட்டோ மொபல் விற்பனை | 100 |
| 11 | ஆட்டோ மொபைல் ஸ்பிரிங் ஒர்க்ஸ் | 100 |
| 12 | மாமிச கடை | 100 |
| 13 | பை விற்பனை கடை | 100 |
| 14 | பை தயாரிப்பு விற்பனை கடை | 100 |
| 15 | வங்கி | 200 |
| 16 | பேட்டரி பழுது (ம) விற்பனை | 100 |
| 17 | அழகு நிலையம் | 100 |
| 18 | ஏல சீட்டு கம்பெனி | 100 |
| 19 | ஜல்லி விற்பனையகம் | 100 |
| 20 | கட்டுமானம் தொழில் நிறுவனம் | 100 |
| 21 | வண்டி பாடி கட்டுமிடம் | 200 |
| 22 | புத்தக நிலையம் | 100 |
| 23 | மலர் கொத்து விற்பனை | 100 |
| 24 | பில்டிங் இன்ஜினியர் வொர்க்ஸ் | 100 |
| 25 | பஸ் பழுதுநீக்கும் இடம் | 100 |
| 26 | வாழை இலை கடை | 200 |
| 27 | கிளினிக் (புற நோயாளிகள் மட்டும்) | 200 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 28 | கோழி கறி கடை | 100 | | |
| | | 29 | கார் உதிரி பாகம் இணைப்பகம் | 100 | | |
| | | 30 | சமையல் பணி | 100 | | |
| | | 31 | சிசிடிவி கேமரா விற்பனை | 100 | | |
| | | 32 | மொபைல் சேல்ஸ் சர்விஸ் | 100 | | |
| | | 33 | சிமெண்ட் கடை | 100 | | |
| | | 34 | சிப்ஸ் தயாரிக்கும் கடை | 100 | | |
| | | 35 | மருந்து ஆய்வகம் | 100 | | |
| | | 36 | கல்லூரி | 100 | | |
| | | 37 | கணினி பழுது நீக்கம் | 100 | | |
| | | 38 | கவரிங் கடை | 100 | | |
| | | 39 | பட்டாசு கடை | 100 | | |
| | | 40 | கூரியர் சர்விஸ் | 100 | | |
| | | 41 | அலங்கார மையம் | 100 | | |
| | | 42 | டிஜிட்டல் பிரிண்ட்ஸ் | 100 | | |
| | | 43 | ஓட்டுநர் பள்ளி | 100 | | |
| | | 44 | கணினி தட்டச்சு மையம் | 100 | | |
| | | 45 | எர்த் மூவர்ஸ் | 100 | | |
| | | 46 | பொறியியல் கல்லூரி | 500 | | |
| | | 47 | இன்ஜினியரிங்க் வொர்க்ஸ் கடை | 100 | | |
| | | 48 | மோட்டார் ரீவைண்டர் | 100 | | |
| | | 49 | மின் சாதன பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 50 | மின் மோட்டார் வண்டி விற்பனை | 100 | | |
| | | 51 | மின் சாதன பழுது நீக்கம் | 100 | | |
| | | 52 | இ – வேஸ்ட் குடோன் | 300 | | |
| | | 53 | மீன் கடை | 100 | | |
| | | 54 | பெட்ரோல் பங்க் | 200 | | |
| | | 55 | அழகு சாதன பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 56 | உரக்கடை | 100 | | |
| | | 57 | தீ சாதன பொருட்கள் | 100 | | |
| | | 58 | காலணி விற்பனை | 100 | | |
| | | 59 | தளவாடங்கள் | 100 | | |
| | | 60 | வட்டி கடை | 100 | | |
| | | 61 | ஜெனரேட்டர் சேல்ஸ் சர்விஸ் | 100 | | |
| | | 62 | ஆட்டோ மொபைல் கிளாஸ் ஓர்க்ஸ் | 300 | | |
| | | 63 | கிரானைட்ஸ் விற்பனை | 100 | | |
| | | 64 | அரசு கட்டிடம் | 100 | | |
| | | 65 | ஹார்டுவேர்ஸ் மற்றம் பெயின்ட்ஸ் | 100 | | |
| | | 66 | வாகனம் பழுது | 100 | | |
| | | 67 | வீட்டு உபயோகம் | 100 | | |
| | | 68 | மருத்துவமனை | | | |
| | | i | மருத்துவமனை (5 படுக்கைகள்) | 500 | | |
| | | ii | மருத்துவமனை (5 படுக்கைக்குள்) | 1000 | | |
| | | 69 | உணவகம் | | | |
| | | i | உணவகம் (இருக்கை 10 க்குள்) | 100 | | |
| | | ii | உணவகம் (இருக்கை 25 க்குள்) | 200 | | |
| | | iii | உணவகம் (இருக்கை 25 க்கு மேல்) | 500 | | |
| | | iv | உணவகம் உடன் கூடிய தங்கும் விடுதி | 1000 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | v | உணவகம் தங்கும் விடுதி உடன் கூடிய பார் | 1500 | | |
| | | 70 | இரும்பு கதவு தயாரிப்பு | 100 | | |
| | | 71 | இரும்பு விற்பனை | 100 | | |
| | | 72 | தொழில் நிறுவன குளிரூட்டும் சாதனம் | 100 | | |
| | | 73 | காப்பீட்டு நிறுவனம் | 100 | | |
| | | 74 | உள்கட்டமைப்பு அலங்கரிப்பாளர்கள் | 100 | | |
| | | 75 | தொழிற்பயிற்சி | 200 | | |
| | | 76 | நகைகடை | | | |
| | | i | சிறிய நகைக்கடை (100 சதுர அடிக்குள்) | 150 | | |
| | | ii | சிறிய நகைக்கடை | 200 | | |
| | | iii | பெரிய நகைக்கடை | 500 | | |
| | | iv | தமிழ்நாடு முழுவதும் கிளைகள் கொண்ட நகைக்கடை | 1000 | | |
| | | 77 | தங்கும் விடுதி | | | |
| | | i | தங்கும் விடுதி(10 அறைகள்) | 200 | | |
| | | ii | தங்கும் விடுதி ( 20 அறைகள்) | 500 | | |
| | | iii | 2 நட்சத்திர தங்கும் விடுதி | 1000 | | |
| | | iv | 3 நட்சத்திர விடுதி | 2000 | | |
| | | v | 3 நட்சத்திர தங்கும் விடுதி | 2500 | | |
| | | iv | 3 நட்சத்திரத்திற்கு மேல் உள்ள தங்கும் விடுதி | 3000 | | |
| | | 78 | லாரி புக்கிங் சர்விஸ் | 100 | | |
| | | 79 | பணியாளர் ஒப்பந்தம் | 100 | | |
| | | 80 | மணிலா உடைப்பகம் | 100 | | |
| | | 81 | மளிகை மற்றும் பொது வணிகம் | 100 | | |
| | | 82 | பெரிய மளிகை கடை மற்றும் பொது வணிகம் | 500 | | |
| | | 83 | மளிகை அங்கீகரிக்கப்பட்ட விற்பனையகம் | 300 | | |
| | | 84 | மார்பிள் கல் விற்பனை | 100 | | |
| | | 85 | திருமண மஹால் | | | |
| | | i | திருமண மண்டபம் (100 இருக்கைக்குள்) | 500 | | |
| | | ii | திருமண மண்டபம் ( 100 இருக்கைக்கு மேல்) | 1000 | | |
| | | iii | திருமண மண்டபம் (சமுதாய சத்திரம்) | 500 | | |
| | | 86 | இரண்டு மூன்று சக்கர வாகன சர்வீஸ் | 100 | | |
| | | 87 | நான்கு சக்கர வாகன சர்வீஸ் | 200 | | |
| | | 88 | மருந்தகம் ஒரு பணியாளர் உடன் | 100 | | |
| | | 89 | மருந்தகம் – பெரியது | 200 | | |
| | | 90 | மருந்தகம் – பெரியது | 500 | | |
| | | 91 | மருந்தகம் – சித்தா /ஆயூர்வேதிக் /ஹோமியோ | 100 | | |
| | | 92 | மருந்துப் பயிற்சி மையம் | 200 | | |
| | | 93 | மண்டி | 200 | | |
| | | 94 | இயற்கை உணவு பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 95 | பழைய இரு சக்கர வாகன உதிரி பாகங்கள் கடை –சிறியது | 200 | | |
| | | 96 | பழைய இருசக்கரவாகன உதிரி பாகங்கள் கடை – பெரியது | 300 | | |
| | | 97 | உணவு எண்ணெய் விற்பனை | 100 | | |
| | | 98 | நெல் இயந்திரங்கள் | 100 | | |
| | | 99 | பெயிண்ட் (மொத்த விற்பனையாளர்கள்) | 200 | | |
| | | 100 | பெயிண்ட் ( சில்லறை விற்பனையாளர்கள்) | 100 | | |
| | | 101 | பார்சல் சர்விஸ் | 200 | | |
| | | 102 | நகை வட்டிக் கடை | 100 | | |
| | | 103 | செல்லப்பிராணிகள் விற்பனை | 100 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 104 | புகைப்படம் லேப் (ஆய்வகம்) | 100 | | |
| | | 105 | புகைப்பட கடை | 100 | | |
| | | 106 | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 107 | ஓட்டுப்பலகைகள் மற்றும் கண்ணாடி விற்பனை கடை | 100 | | |
| | | 108 | பாலிடெக்னிக்ஸ் | 200 | | |
| | | 109 | பவர் டூல்ஸ் | 100 | | |
| | | 110 | அச்சகம் பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 111 | லித்தோ பிரிண்டர்ஸ் | 200 | | |
| | | 112 | ஸ்கிரீன் பிரிண்டர்ஸ் | 100 | | |
| | | 113 | பி.வி.சி.கதவுகள் மற்றும் பைப்புகள் விற்பனை | 100 | | |
| | | 114 | வீட்டுமனை விற்பனையாளர்கள் | 100 | | |
| | | 115 | அரிசி ஆலை | 100 | | |
| | | 116 | ரோலிங் கதவு | 100 | | |
| | | 117 | ரப்பர் ஸ்டாம்ப் | 100 | | |
| | | 118 | சுகாதார பொருட்கள் விற்பனை | 100 | | |
| | | 119 | ஸ்கேன் சென்டர்ஸ் | 200 | | |
| | | 120 | காலணி விற்பனை /ஷீ மார்ட் | 100 | | |
| | | 121 | scrap shop small | 200 | | |
| | | 122 | Scrap shop Big | 300 | | |
| | | 123 | மேல்நிலைப்பள்ளி | 600 | | |
| | | 124 | உயர்நிலைப்பள்ளி | 500 | | |
| | | 125 | நடுநிலைப்பள்ளி | 400 | | |
| | | 126 | துவக்கப்பள்ளி | 300 | | |
| | | 127 | குழந்தைகள் பள்ளி | 200 | | |
| | | 128 | சிற்ப வேலை | 100 | | |
| | | 129 | பாதுகாப்பு சேவைகள் | 100 | | |
| | | 130 | பட்டு சேலை விற்பனை | 200 | | |
| | | 131 | சோலார் பேனல் | 100 | | |
| | | 132 | சவுண்ட் சர்வீஸ் | 100 | | |
| | | 133 | இரு/மூன்று சக்கர வாகன உதிரி பாகங்கள் கடை | 200 | | |
| | | 134 | நான்கு சக்கர வாகன உதிரி பாகங்கள் கடை | 300 | | |
| | | 135 | ஆறு சக்கர வாகன உதிரி பாகங்கள் கடை | 300 | | |
| | | 136 | பெட்ரோல் பங்க் | 200 | | |
| | | 137 | இரும்பு கடை 10X10 | 100 | | |
| | | 138 | இரும்பு கடை 10X10 க்கு மேல் | 200 | | |
| | | 139 | ஸ்டிக்கர் கடை | 100 | | |
| | | 140 | வணிக வளாகம் | 200 | | |
| | | 141 | சப்ளையர்கள் | 500 | | |
| | | 142 | இனிப்பகம் (சிறியது) | 100 | | |
| | | | இனிப்பகம் (பெரியது) | 500 | | |
| | | 143 | தையலகம் 5 தையல் இயந்திரம் | 100 | | |
| | | 144 | தையலகம் 5 தையல் இயந்திரக்கு மேல் | 500 | | |
| | | 145 | தையல் இயந்திரம் உதிரி பாகங்கள் | 100 | | |
| | | 146 | துணிக்கடை சிறியது | 100 | | |
| | | | துணிக்கடை பெரியது | 500 | | |
| | | 147 | துணிக்கடை – ரெடிமேட்ஸ் | 200 | | |
| | | 148 | டிராக்டர் விற்பனை மற்றும் பழுது நீக்கம் | 100 | | |
| | | 149 | டிராக்டர் உதிரி பாகம் விற்பனை மற்றும் பழுது நீக்கம் | 100 | | |

| | | |
|---|---|---|
| 150 | மரவாடி | 500 |
| 151 | டைல்ஸ் நிறுவனம் | 200 |
| 152 | சுற்றுலா கார் | 100 |
| 153 | டியூசன் சென்டர்ஸ் | 100 |
| 154 | தட்டச்சு பயிலகம் | 100 |
| 155 | டையர் விற்பனை | 100 |
| 156 | பல்கலைகழகம் பயிற்சி நிறுவனம் | 100 |
| 157 | இன்வென்டர்ஸ் | 100 |
| 158 | Upvc Window Mfrs | 100 |
| 159 | vessel Merchants Small<br>Vessel Merchant Big | 100<br>200 |
| 160 | கைக்கடிகார கடை | 100 |
| 161 | குடிநீர் சுத்திகரிப்பு | 100 |
| 162 | வெல்டிங் ஒர்க்ஸ் | 100 |
| 163 | எடை இயந்திரம் | 100 |
| 164 | வீல் பழுதாகம் | 100 |
| 165 | மர செதுக்குதல் வேலை | 100 |
| 166 | X RAY சென்டர்ஸ் | 100 |
| 167 | ஜெராக்ஸ் சென்டர்ஸ் (நகலகம்) | 100 |
| 168 | இருசக்கர வாகனம் விற்பனையாளர்கள் | 200 |
| 169 | மூன்று சக்கர வாகனம் விற்பனையாளர்கள் | 300 |
| 170 | நான்கு சக்கர வாகனம் விற்பனையாளர்கள் | 400 |
| 171 | சொந்தமாக அகற்றும் பல்க்வேஸ்ட் ஜெனரேட்டர் | 500 |
| 172 | பொதுவான அகற்றுல் கொண்ட பல்க்வேஸ்ட் | 750 |
| 173 | பெட்டிக் கடை | 75 |
| 174 | பழக்கடை | 150 |
| 175 | காய்கறி கடை – சிறியது<br>காய்கறிகடை – பெரியது | 150<br>250 |
| 176 | பூக்கடை | 100 |
| 177 | டிவி ஷோ ரூம் | 500 |
| 178 | திரையரங்கம் | 500 |
| 179 | அட்டவணையில் குறிப்பிடப்படாத சிறிய இனங்கள் | 75 |
| 180 | அட்டவணையில் குறிப்பிடப்படாத நடுத்தர இனங்கள் | 500 |
| 181 | அட்டவணையில் குறிப்பிடப்படாத பெரிய இனங்கள் | 1000 |

மேற்படி நிர்ணயம் செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை கட்டணத்தினை இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 2375/2023/எச்1)

6

**பொருள் 6**

தீர்மான எண்–655
தீர்மான விபரம்
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் வார்டு எண்.1, கோட்டை மேட்டுப்பகுதி, கோட்டைமேடு இரண்டாவது குறுக்குத் தெரு, மூன்றாவது குறுக்குத் தெரு மற்றும் நான்காவது குறுக்குத்தெருக்களில், பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. மேலும், ஆய்வுக்குழிகள் இல்லாத சாலைகளிலும், வீட்டு இணைப்பினை எடுத்து வந்து Champer அமைத்து

| | | |
|---|---|---|
| | Existing Manholeல் இணைத்துள்ளார்கள். இதனால் உரிய Level வழிவகை இல்லாமல் கழிவுநீர் வெளியேறி பொது சுகாதாரப் பிரச்சினை ஏற்படுகின்றது. இதனை தவிர்ப்பதற்காக, மேற்கண்ட தெருக்களுக்கு புதியதாக பாதாள சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும். எனவே, அதற்கான மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இச்செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 7 | பொருள் 7<br>இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை வடிகால் ஆக்கிரமிப்பு தொடர்பாக, தொடரப்பட்ட வழக்கு எண்.S.A.No.1870 of 2021 திரும்ப பெற்ற நிலையில் தீர்ப்பாணை வரப்பெற்றுள்ளது. இந்நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்கள் வழக்கில் ஆஜராகியதற்கு வழக்குக் கட்டணம் ரூ.15,000/–ம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்–656**<br>**தீர்மான விபரம்**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 8 | பொருள் 8<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான முதற்கட்ட முகாம் 24.07.2023 முதல் 04.08.2023 வரை (12 நாட்கள்) முகாம் நடத்துவதற்கு தேவையான சாமியானா பந்தல், சேர்கள் மற்றும் குடிநீர் வசதி, புதியதாக 4 எண்ணம் சின்டெக்ஸ் டேங்க் போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் (3 பள்ளிகளில்) அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவு ரூ.80,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 2537/2023/இ1) | **தீர்மான எண்–657**<br>**தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது.** |
| 9 | பொருள் 9<br>இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான இரண்டாம் கட்ட முகாம் 05.08.2023 முதல் 16.08.2023 வரை (12 நாட்கள்) நடத்துவதற்கு தேவையான சாமியானா பந்தல், சேர்கள் மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் (2 பள்ளிகளில்) அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவு ரூ.40,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2804/2023/இ1) | **தீர்மான எண்–658**<br>**தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது.** |
| 10 | பொருள் 10<br>இராமநாதபுரம் நகராட்சி, இரயில் நிலையம் அருகில் உள்ள பழைய பேருந்து நிலையம் முகப்பில் 7 கடைகள் கட்டப்பட்டு 51 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் மழைநீர் தேங்கி அவ்வப்பொழுது மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுவதும் அதனை சரிசெய்வதும் வாடிக்கையாகி வருகிறது. அரசாணை எண்.28, நகராட்சி | **தீர்மான எண்–659**<br>**தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 22.02.2023-ன் படி, தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையத்தை இடித்து விட்டு அதே இடத்தில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட உள்ளதால் இரயில் நிலையம் அருகில் உள்ள பழைய பேருந்து நிலையத்தை தற்காலிக பேருந்து நிலையமாக மாற்றப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. எனவே, பொதுமக்களின் நலன்கருதி பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தை ஸ்திரத்தன்மை அடிப்படையில் 7 கடைகளை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அனுமதி பெற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – 1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1036/2023/இ1) | |
| 11 | பொருள் 11<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.கஎண்.18205/2023/SBM2, நாள்.28.07.2023 அவர்களின் உத்தரவின்படி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நகராட்சிகளான இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம் மற்றும் கீழக்கரை நகர பகுதிகளில் பதிவு செய்து நச்சுத்தொட்டி சுத்தம் செய்யும் வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் பணிபுரியும் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்களுடன் நச்சுத்தொட்டியினை பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வது சம்பந்தமாகவும், கசடு கழிவு மேலாண்மை விதிகள் பற்றியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக SBM PIU குழுவால் இராமநாதபுரம் மாவட்ட அளவில் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் ஒருநாள் சிறப்பு பயிற்சி வழங்கிடவும், பயிற்சியில் கலந்துகொள்ளும் வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேனீர் மற்றும் மதிய உணவு வழங்கிடவும் பயிற்சியில் கலந்துகொள்ளும் ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.500/-ம் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நமது மாவட்டத்தில் 45 நபர்களுக்கு மேற்கண்ட பயிற்சி 09.08.2023 அன்று வழங்க இருப்பதால் பயிற்சிக்கான மொத்த செலவின தொகையில் ரூ.40,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கும் மேற்படி செலவின தொகையில் ஓட்டுனர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18205/2023/SBM2, நாள் : 28.07.2023-ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று மாநில திறன் மேம்பாட்டு நிதியிலிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளப்படும் என்ற விபரமும், இதர செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம். மேலும் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்-660<br>தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது. |
| 12 | பொருள் 12<br>இராமநாதபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குறைந்த அளவே குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், குடிநீர் வரக்கூடிய பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளால் அடிக்கடி குடிநீர் விநியோகம் தடைபடுகின்றது. இதனால் நகர் பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. மேலும், தற்போது கோடைகாலம் | தீர்மான எண்-661<br>தீர்மான விபரம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஆரம்பித்துவிட்டபடியால் நகரில் உள்ள அனைத்து வார்டுகளுக்கும் தனியார் லாரி மூலம் தெருக்களில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்.542, நாள்:31.05.2023-ல் ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நகர்மன்ற தீர்மானம் எண்.542, நாள்:31.05.2023-ன் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.எம்.கே.திருமுருகன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 13.07.2023 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த மாதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நாள் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய 66 இலட்சம் லிட்டர் குடிநீருக்கு பதிலாக சராசரியாக 15 முதல் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டும் வழங்கப்பட்டது. அதனால் அனைத்து வார்டுகளிலும் குடிநீர் விநியோக பற்றாக்குறை ஏற்பட்டதால் ஒருநாள் விட்டு ஒருநாள் லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் தினசரி 14 நடை தண்ணீர் லாரி மூலம் விநியோகம் செய்யப்பட்டது. அதனால் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டிருந்த 263 நடை 05.08.2023-ல் நிறைவடைந்து விட்டது. இந்நிலையில், தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குறைவான அளவில் குடிநீர் வழங்குவதாலும், கோடைகாலம் தொடர்வதாலும் குடிநீர் பற்றாக்குறையை சமாளித்திட மீண்டும் நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.<br>எனவே, மீண்டும் தொடர்ந்து 07.08.2023 முதல் வாடகை லாரி மூலம் வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.9.60 இலட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், தற்போதைய சூழலில் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி உத்திரவு வழங்கிட காலதாமதம் ஏற்படும் என்பதால் ஏற்கனவே ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ள திரு.எம்.கே.திருமுருகன் ஒப்பந்ததாரர் வசம் பணியை ஒப்படைத்து செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) குடிநீர் விநியோகம் அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1850/2023/இ1) | |
| 13 | பொருள் 13<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.16495/2023/CFC-1, நாள்:12.06.2023-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இராமநாதபுரம் நகராட்சிக்கு ப்ளோ பேக் (12 டன் க்ரோ (பிஎஸ்விஜ) கிளாஸ் 6000 லிட்டர் டேங்க் திறன் மற்றும் வாக்கம் பம்ப்-2500 கம்/லிட்டர் கொண்ட டிரக் பொருத்தப்பட்ட உறிஞ்சும் இயந்திரம் வாகனம் (Truck Mounted Suction Machine with blow back (12 Ton Grw (BSCI) Classis 6000 Litre Tank Capacity & Vaccum Pump-2500 Cum/Ltr) வாங்கிட ரூ.69.03 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 1785/2023/இ1 | தீர்மான எண்-662<br>தீர்மான விபரம் – பதிவு செய்யப்பட்டது. |
| 14 | பொருள் 14<br>இராமநாதபுரம் நகராட்சி நுண் உரக்கூட மையங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை அரைத்து உரமாக்கும் பணிகள் நடைபெற்று | தீர்மான எண்-663<br>தீர்மான விபரம் –<br>அலுவலக குறிப்பு |

| | | |
|---|---|---|
| | வருகிறது. தற்போது அரசு வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்படும் நுண் உரத்தினை *செழிப்பு* என்ற பெயரில் வேளாண்மை துறையிடமிருந்து விற்பனை செய்வதற்கான உரிமம் பெற்று பொதுமக்களுக்கு விற்பனைக்கு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நமது நகராட்சியால் தயார் செய்யப்படும் உரத்தினை பகுப்பாய்வு செய்து அதன் அறிக்கையின்படி *செழிப்பு* என்ற உரிமம் பெறப்பட்டு விட்டது. எனவே தயார் செய்யப்படும் உரத்தினை குவிக்கும் இயந்திரம் கொண்டு கலந்து எடுக்கும் பட்சத்தில் அதனை இப்பொருட்டு விற்பனை செய்திட ஏதுவாகும் செழிப்பு நுண்உரக்கூட மையங்களுக்கு அரைக்கும் இயந்திரம் இரண்டு எண்ணிக்கை வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.89,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1)மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | பொருள் 15<br>இராமநாதபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி நமது நகராட்சியில் திடக்கழிவுகள் தரம் பிரித்து சேகரித்து வாங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மக்கும் குப்பைகள் நுண் உரக்கூட மையங்களில் உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மக்காத குப்பைகளை மறுசுழற்சிக்கு பயனற்ற எரியக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகள் நாளொன்றிற்கு 4 டன் வீதம் சேகரிக்கப்பட்டு கலவை உரக்கிடங்கில் சேமித்து வைக்கப்படுகிறது. மேற்படி கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதியில் தெரிவித்துள்ளவாறு சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி வைத்து இறுதியாக்கம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சிமெண்ட் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நகராட்சி செலவில் பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் நகராட்சி உரக்கிடங்கிலிருந்து டால்மியா சிமெண்ட், திருச்சி நிறுவனத்திற்கு சுமார் 330கி.மீ தூரமும் உள்ளதாலும் நடை ஒன்றிற்கு 10 மெ.டன் வீதம் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப ரூ.21,000/- லாரி வாடகை செலவினம் மேற்கொள்ள வேணடியுள்ளது. கையிருப்பில் உள்ள 210 மெ.டன் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்பிட உத்தேச செலவினம் ரூ.4.50 லட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)திடக்கழிவு மேலாண்மை பயணக்கட்டணம் (SUC) நிதியிலிருந்து செலவு செய்யலாம். | தீர்மான எண்-664<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| 16 | பொருள் 16<br>இராமநாதபுரம் நகராட்சியின் 2020 - 2021, 2021 -2022-ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணமாக ரூ(89,353+1,11,279) = 2,00,632-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்திடுமாறு 2020-2021, 2021-2022-ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி அறிக்கை பத்தி எண்.64, 77-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தணிக்கைப் பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு தொகை ரூ.2,00,632/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 528/2017/அ4) | தீர்மான எண்-665<br>தீர்மான விபரம்<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

17

**பொருள் 17**

இராமநாதபுரம் நகராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–2023 இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் பரிந்துரை செய்த, இராமநாதபுரம் நகராட்சி 21–வது வார்டு கறிக்கடை சந்தில் கோட்டை வாசலில் இருந்து வாலியா கேஸ் வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.631 நாள்.28.07.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 11.08.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த

| வ. எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம் | 0.03% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம் | 0.22%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம்" அவர்களது 0.03% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1888/2023/இ1

**தீர்மான எண்–666**
**தீர்மான விபரம்**
**அலுவலக குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது.**

18

**பொருள் 18**

இராமநாதபுரம் நகராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–2023 இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் பரிந்துரை செய்த, இராமநாதபுரம் நகராட்சி 12–வது வார்டு முத்துராமலிங்க சுவாமி தெற்குத்தெரு தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.631 நாள்.28.07.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 11.08.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த

| வ. எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | M/S.ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம் | 0.31% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/S.வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம் | 0.73%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

**தீர்மான எண்–667**
**தீர்மான விபரம்**
**அலுவலக குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "M/S.ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம்" அவர்களது 0.31% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1888/2023/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>19</td>
